28. எதிர்நோக்கும் காற்றுச்சூழல் தாக்கங்கள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள்
29. எதிர்நோக்கும் ஒலிச்சூழல் தாக்கங்கள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள்
30. சாலைகளில் நீர் தெளித்தல்
31. பசுமை அரண் அமைத்தல்
32. சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்
33. தொழில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு
34. திட்டத்தின் நன்மைகள்
35. முடிவுரை

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(கூ.பொ.):</u>**

பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் முகவரியினை பதிவு செய்துவிட்டு அதன்படி இத்திட்டம் குறித்த கருத்துக்களை தெரிவிக்குமாறு கூறினார்.

1. **<u>திரு.ந.சண்முகம், சட்ட விரோத கல் குவாரி எதிர்ப்பு இயக்கம், கரூர்:</u>**

கரூர் மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் இணைந்து நடத்தும் சத்யா கல்குவாரிக்கான பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கரூர் மாவட்டம், புன்னம்சத்திரம் கிராமம் சத்யா கல்குவாரி புல எண்.1287/1(P) மற்றும்1287/3–ல் ஹெக்டேர் 1.8 பரப்பளவில் அமையக்கூடிய கல்குவாரியானது பல்வேறு விதமான விதிமீறல்கள் உள்ளதால் இந்தக் குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பது எனது முதல் கருத்து. அதாவது தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1950, 1959 பிரிவு பல்வேறு விதிமுறைகளை வகுத்து அதனடிப்படையில் தான் கல்குவாரிகள் இயங்க வேண்டும் என்ற விதிமுறைகளை வகுத்துள்ளது. அதனடிப்படையில் இந்த கல்குவாரிக்கான கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்தப்படுகிறது. கருத்துக்கேட்புக் கூட்டத்தில் என்னென்ன விதிமீறல்கள்

இந்தக் குவாரியில் உள்ளது என்பதைக் கூறி அதனடிப்படையில் இந்தக் குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பதை கூறுவதற்காகத்தான் இங்கு வந்துள்ளோம்.

இந்தக் குவாரி புலத்தில் இயங்குமேயானால் என்னென்ன சுற்றுச்சூழல் தாக்கங்கள் ஏற்படும் என்றால், நிலச்சூழல், நீர்சூழல், காற்று சூழல், ஒலிச்சூழல், பொருளாதார சூழல், நுண்ணுயிர்சூழல் போன்ற தாக்கங்கள் ஏற்படும். அந்த தாக்கங்களை எப்படி நிவர்த்தி செய்வது என்பதற்கான திட்டவரைவுத்தான் இந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டாளர்கள் நம்மிடம் விளக்கம் அளித்தார்கள். இக்குவாரி ஏற்கனவே இயங்கிய குவாரிதான். இந்தக் குவாரி பகுதியை சுற்றி பார்த்தோமேயானால் சாலைக்கு மேல் உள்ளது. இந்த படத்தில் பார்த்தீர்கள் என்றால் இந்த குவாரியைச் சுற்றி 10–க்கும் மேற்பட்ட குவாரிகள் அமைந்துள்ளன. இதில் இயங்காத குவாரியும் உள்ளது. அக்குவாரிகள் சாலையின் அருகிலேயே அமைந்துள்ளது. கிட்டத்தட்ட 200 அடி ஆழத்தில் சாலையின் அருகிலேயே அமைந்துள்ளது. இதில் பல்வேறு விதிமீறல்கள் உள்ளதால் இக்குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று கூறுகிறோம். 1.8 ஹெக்டேரில் அமையவுள்ள இக்குவாரியை சுற்றி பாத்தால் ஒரு ஓடை உள்ளது. 500 மீட்டர் அதாவது 175 அடியில் ஓடைகள், வாய்க்கால் இடைவெளி விட வேண்டும் என்று சிறுகனிம சலுகை விதிகளின்படி 1959 சட்டம் கூறுகிறது. ஆனால் கல்குவாரி அமையும் புலஎண்.1257/13–ல் ஓடை செல்கிறது. இது கிராம வரைபடத்தில் உள்ளது. அதை வரைபடத்திலும் காட்டியுள்ளார்கள். அப்படி ஓடையுள்ள பகுதியில் குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பது தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் கூறுகிறது. ஆகவே இந்த குவாரிக்கு எந்த விதத்திலும் அனுமதி கொடுக்கக்கூடாது. அதுமட்டுமல்லாமல் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின்படி 1989 சட்டம் பிரிவு 36, 1 ன்படி 500 மீட்டர் சுற்றளவில் ஓடை இருப்பதை Mining Plan–ல் காட்டவில்லை. ஆனால் உள்ளேயே இரண்டு ஓடை செல்கிறது. ஆகவே இக்குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது. மேலும் சென்னை உதவி ஆணையர், நிர்வாகம் அவர்கள் தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும் நிலவியல் பாதை மற்றும் ஓடை பூஸ்திபாதை இருந்தாலும் வருவாய் நில எண் 25 பிரிவு 15–ன் அரசாணை ஓடை மற்றும் பாதை ஆகியவை அரசின் சொத்து என்று தெளிவாக வரையறுத்துள்ளது. இவற்றையெல்லாம் நாங்கள் தகவல்அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்டு தகவல்கள் வாங்கியுள்ளோம். அதனடிப்படையில் இக்குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது. ஓடை தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும் அது சட்டப்படி அரசு சொத்துதான். இந்த ஓடை, கல்குவாரியின் சரியான இடைவெளி இல்லாமல் அமைந்துள்ளது. ஆகவே இக்குவாரிக்கு அனுமதி தரக்கூடாது. MDR, ODR என்று கூறக்கூடிய தார்ச்சாலை அமைந்துள்ளது. குவாரியின் தார்சாலைக்கு மேல்புறம் குப்பம் கிராமமும், கீழ்புறம் புன்னம்சத்திரம் கிராமமும் உள்ளது. தார்சாலையில் 5 மீட்டர் இடைவெளிகூட கிடையாது. இக்குவாரி ஏற்கனவே இயங்கிய குவாரிதான். குவாரியின் மேற்குப் பகுதியில் கிட்டத்தட்ட 5 குவாரிகள் இருக்கின்றன. திருமதி T.சத்யா இவர்கள் கிழக்குப்புறத்தில் முன்மொழியப்பட்ட குவாரி உள்ளது. மேற்கு புறத்தில் உள்ள தேவராஜ் குவாரிக்கு ஏற்கனவே கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்தி பக்கத்தில் 100 மீட்டரில் வீடு இருப்பதனால் அதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. அதுபோல் KSR என்று கூறக்கூடிய சக்திவேல் குவாரி குப்பம் கிராமம் மேல் பகுதியில் இயங்கிக் கொண்டு உள்ளது.

அந்த குவாரிக்கு அனுமதியே கிடையாது. அந்தக் குவாரி இயங்கிக் கொண்டு உள்ளது. அதுபோல் நாட்ராயன் குவாரியில் கிட்டத்தட்ட 200 அடி ஆழத்திற்கு கல் வெட்டி எடுத்துள்ளார்கள். ஆனால் அதற்கும் அனுமதி கிடையாது. அதில் 4 லாரி மண்ணைப் போட்டு அதை மூடிக்கொண்டுள்ளார்கள். நேற்று நாங்கள் தாசில்தார் அவர்களிடம் எடுத்துரைத்துள்ளோம். எங்களுக்கு இயங்காத குவாரியை மூடுவதற்கு அனுமதி இருக்கிறது என்று கூறுகிறார்கள். 1996–லேயே சட்டப்படி கூறினார்கள் என்னவென்றால் இயங்காத குவாரியை கம்பிவேலி போட்டு பராமரிக்க வேண்டும். மேலும் அது தண்ணீர் என்று தேங்கும் இடமாக மட்டுமே இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். ஆனால் அதற்குள்ளேயே மண்ணைப்போட்டு மூடிக்கொண்டு உள்ளார்கள். அதாவது ஒரு குவாரியை மண்போட்டு மூடி அதற்குமேல் விவசாயம் செய்ய வேண்டும் என்றால் தலைமைச் செயலாளர் அனுமதி பெற்றுதான் மாற்ற வேண்டும். ஆனால் இங்குள்ள அத்தனை குவாரிகளில் இருந்து எம்–சான்ட் கழிவுகளை கொட்டி குழியை மூடிக்கொண்டுள்ளார்கள். இதை நாங்கள் தாசில்தார் அவர்களிடமும் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அதிகாரி அவர்களிடமும் அழைத்து கூறினோம். ஐயா அவர்கள் அலைபேசியை எடுக்காததால் கட்சேவி (whatsapp) வாயிலாக தகவல் அனுப்பி உள்ளோம். இதுபோல் இப்பகுதியில் சுமார் 7, 8 குவாரிகள் அனுமதி இல்லாமல் இயங்கிக் கொண்டுதான் உள்ளது. அந்த நாட்ராயன் குவாரியில் எனக்கு தெரிந்து ஒரு 1000 லோடு மண்ணைபோட்டு மூடிக்கொண்டுள்ளார்கள். நீங்கள் தயவு செய்து சென்று பாருங்கள். இது சட்டவிரோதமான செயல் அவர்கள் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இக்குவாரி எவ்விதத்திலும் இடைவெளி இல்லாமல் இயங்குகிறது.

ஆகையால் இதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது. அதுபோல் குவாரியின் மேற்கு புறத்தில் தார்ச்சாலை அமைந்துள்ளது. இதை கிராம வரைபடத்திலும், புல வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளது. இதற்கு 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்று சுரங்கத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் 5 மீட்டர் இடைவெளி கூட கிடையாது. இதுதான் நிதர்சனமான உண்மை. எனவே சிறுகனிம விதியின்படி அனுமதி தர முடியாது. அங்கு சென்று ஆய்வு செய்தீர்கள் என்றால் தெரியும். அங்கு ஒரு மஞ்சள் கல் நட்டுள்ளார்கள். அந்தக் கல்லை ஒட்டி 5 மீட்டரில் பெரிய தார்சாலை செல்கிறது. தார்சாலையில் மேல்புறம் பார்த்தீர்கள் என்றால் 5 மீட்டர் இடைவெளியில் கிட்டத்தட்ட 200 மீட்டர் ஆழத்திற்கு குழி வெட்டப்பட்டுள்ளது. எட்டிப்பார்த்தால் நீங்கள் மயக்கம்போட்டு கீழே விழுந்துவிடுவீர்கள் அந்தளவுக்கு உள்ளது. ஏதாவது பெரிய வாகனங்கள் சிறிது தடுமாறினாலும் உடைத்துக்கொண்டு உள்ளே செல்ல வேண்டியதுதான். அந்த ஓடையில் கட்டுமான பணி இருக்கிறது. ஆனால் அதையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் உள்ளனர். அந்தக் குவாரி அருணாச்சலா குவாரி அதன்மீது தொடர்ந்து நாங்கள் புகார் கொடுத்ததன் அடிப்படையில் அதை மூடியுள்ளார்கள். தேவராஜ் குவாரியும், மற்றொரு குவாரியும் மூடியுள்ளார்கள். நாட்ராயன் குவாரி இயங்கிக் கொண்டுள்ளது. இவையெல்லாம் விதிகளை மீறி இருக்கின்றன. இந்த மாதிரிதான் தமிழ்நாடு முழுவதும் உள்ள குவாரிகள் அனைத்திலும் விதி மீறல்கள் மிகப்பெரிய அளவில் உள்ளது. அதுபோல் தாழ்வழுத்த மின்சாரம் 50 மீட்டர் இடைவெளிவிட்டுதான் இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு சிறுகனிம விதி 1950–ல் கூறுகிறது. ஆனால் கல்குவாரி அமையும் புல எண்.1287/1–ல் வடமேற்கில் 50 மீட்டர் இடைவெளியில் தாழ்வழுத்த மின்கம்பி செல்கிறது.

50 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்று சுரங்கத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் 15 மீட்டர் இடைவெளி கூட குவாரிக்கும், தாழ்வழுத்த மின்கம்பிக்கும் இல்லை என்பதுதான் எதார்த்தமாக உள்ளது. ஆகவே இதன் அடிப்படையிலும் எந்த விதத்திலும் கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது. அதுபோல் கல்குவாரியின் அருகில் உயர் மின்கோபுரம் செல்லக்கூடாது. குவாரியின் பகுதியில் வெளிமுனைப் பகுதியிலிருந்து 300 மீட்டரில் 1000 அடிஇடைவெளி இருக்க வேண்டும் என்பது இந்திய மின்சார சட்டம் 1959 பிரிவு 83, 2–ல் தெளிவாக கூறுகிறது. ஆனால் சத்யா கல்குவாரியில் கிழக்குப் புறத்தில் குவாரியின், வெளிமுனைப் பகுதியில் 300 மீ சுற்றளவிற்கு உள்ளேயே உயர்மின்கோபுரம் செல்கின்றது. எனவே இந்த கல்குவாரிக்கு 1956 பிரிவு 83–ன் படி இந்திய மின்சார சட்டத்தின் படி அனுமதி கொடுக்கக்கூடாது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டுமனைகள், நிரந்தர கட்டுமானங்கள் ஆகியவை சிறுகனிம சலுகை விதி 1959 பிரிவு 36–ன்படி ஊராட்சியால் DTCPயால் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள், ஊர் நத்தம் மற்றும் கோவில்கள் போன்ற நிரந்தர கட்டுமானங்கள் அரசின் தொகுப்பு வீடுகள், பசுமை வீடுகள், இருந்தால் 300 மீட்டர் இடைவெளிவிட்டு குவாரிப் பணி செய்ய வேண்டும் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. குவாரி புலத்தில் 220 மீட்டரில் வீடுகள் உள்ளது. மேலும் அதிகாரிகள் தவறாக வருவாய் துறை ஆவணங்களில் கட்டிய வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை வீடு இடிந்து விட்டது, வீடு சேதம் அடைந்துவிட்டது என தவறுதலாக கூறி மறைத்து வருகின்றனர்.

ஆனால் சிறு கனிம சலுகை விதிகளின்படி 1959 சட்டப்பிடி UDR வருவாய்துறை ஆவணங்களில், வீடு சேதமடைந்து இருந்தாலும், அது வீடு மற்றும் வீட்டுமனை தான் என்று கூறப்பட்டுள்ளது. இந்த வரலாற்று சிறப்புமிக்க உண்மையை தகவல் அறியும் உரிமை சட்டத்தில் வாங்கி இருக்கின்றோம். அதன் அடிப்படையில் பார்த்தீர்கள் என்றால் இந்த குவாரியை சுற்றி பல்வேறு இடங்களில் வீடு உள்ளது. 100மீட்டர், 220 மீட்டர், 130 மீட்டர், 196 மீட்டர் சுற்றளவில் 10–க்கும் அதிகமான வீடுகள் உள்ளது. வீடுகள் இருப்பதினால் இந்த குவாரிக்கு எந்த விதத்திலும் அனுமதி கொடுக்க முடியாது. அதுமட்டுமல்லாமல் கல்குவாரி அமையும் புலத்தை சுற்றிலும் 300 மீட்டர் சுற்றளவில் நிரந்தர மற்றும் தற்காலிக வீடுகள் உள்ளன. தற்காலிக வீடுகள், வெடி வைக்கும் இடத்தை சுற்றி இருக்கக்கூடாது என பல்வேறு அரசு விதிகள் கூறுகின்றன. அவ்வாறு சட்டவிரோதமாக அனுமதி கொடுத்தால் மே 1–ந்தேதி விருதுநகர் மாவட்டம், அந்தியூர் கிராமம் போல் வெடி விபத்து சம்பவம் நடந்தால் உயிர்பலி மற்றும் அனைத்தும் பாதிக்கப்படும் என்பதால் அரசு வகுத்துள்ளது. எனவே குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது நேற்று கோபிசெட்டிபாளையத்தில் துறையம்பாளையத்தில் கிட்டத்தட்ட 9 ஆண்டுகளாக அனுமதி இல்லாமல் இயங்கிய குவாரி, வெடி வைத்து வேலை செய்த கணவன், மனைவி இருவரும் இறந்துவிட்டார்கள். ஒருவரின் உடலை எளிமையாக எடுத்துவிட்டார்கள். இன்னொருவரின் உடலை மிகவும் சிரமப்பட்டுதான் எடுத்தார்கள். கரூர் மாவட்டத்தில் பார்த்தீர்கள் என்றால் 70–க்கும் அதிகமான குவாரிகள் உங்களிடம் List கொடுத்துள்ளோம். ஐயா, அதேபோல் முகாந்திரக்கடிதம் கொடுக்கப்பட்ட குவாரிகளின் List கொடுத்துள்ளோம்.

அனைத்து குவாரிகளும் தொடர்ந்து இந்தப் பகுதியில் இயங்கிக் கொண்டுள்ளது. இந்த பக்கத்தில் உள்ள 7, 8 குவாரிகள் தொடர்ந்து இயங்கிக் கொண்டுள்ளது. சட்டப்படி நடவடிக்கை எடுங்கள். மனித உயிர்கள் பிறப்பது மற்றும் இறப்பது ஒரு முறை மட்டுமே. அதேபோல் 2, 3 நாட்களுக்கு

முன்பு ஒரு குவாரியில் வண்டி சரிந்து ஒருவர் உயிர் இழந்துள்ளார் என்று கூறுகிறார்கள். அதேபோல் ஒரு குவாரியை மூடுவதற்கு சமூக செயல்பாட்டாளர் திரு.ஜெகநாதன் 2 ஆண்டுகளுக்கு முன்பு கொலை செய்துள்ளார்கள். பல்வேறு விதமான குவாரிகள் சட்ட விரோதமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. கரூர் மாவட்டத்தில் 56, 60 குவாரிகள் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். தொடர்ந்து அனைத்து விவசாயிகள் கூட்டத்திலும் கரூர் மாவட்டத்தில் அனைத்து விதமான புகார்களையும் கொடுத்து கொண்டிருக்கின்றோம். எந்த குவாரி மூடப்படுகிறது. கரூர் மாவட்டத்தில் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. இது குறித்து தொடர்ந்து புகார் கொடுத்து கொண்டுள்ளோம். எங்களுக்கு அச்சுறுத்தல் வருகிறது. அரசு அதிகாரிகள் இந்த குவாரிகளை மூடுவார்களா? என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். வயநாட்டில் நடந்த கோர விபரத்து, இயற்கையோடு இணைந்து வாழ்ந்தால் மட்டுமே மனிதன் வாழ முடியும். இயற்கையை அழித்தால் என்ன நடக்கும் என்பதற்கு 1200 வீடுகள் புதைந்து 600–க்கும் மேற்பட்ட மக்கள் இறந்திருக்கிறார்கள். Google வரைபடத்தில் பார்த்தால் இந்த குவாரிக்கு அருகாமையில் வீடுகள் இருப்பதாக காண்பிக்கப்பட்டிருக்கிறது. வடமேற்கு புறத்தில் 202 மீட்டர் தூரத்தில் ஒரு வீடும், வடக்கு புறத்தில் 162 மீட்டரில் ஒரு வீடும், 209, 226 மீட்டரில் வீடுகள் உள்ளது காண்பிக்கப்பட்டுள்ளது. Google வரைபடத்தில் வடக்குப் புறத்தில் 228 மீட்டரிலும், 136 மீட்டரிலும் கல்குவாரியை சுற்றி 6 வீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது. Google வரைபடத்தில் உள்ளதை வைத்துப் பார்த்தாலே, இந்த சத்யா கல்குவாரிக்கு, தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின்படி அனுமதி கொடுக்க முடியாது. சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையோடு மாநில சுற்றுச்சூழல் ஆணையம் தெரிவித்துள்ள Terms of Reference-ல் 45 வகையான ஆவணங்களை வைத்துதான் கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்த வேண்டும் என்று கூறுகிறார்கள்.

பல்வேறு ஆவணங்கள் இணைக்கப்படவில்லை, கிராம வரைபடமே வைக்கவில்லை நாங்கள் கிராம நிர்வாக அலுவலர் அவர்களிடம் சென்று புகைப்படம் எடுத்து வந்தோம். அந்த ஓடை செல்வது காட்டப்பட்டுள்ளது, இதில் ஓடை காட்டப்படவில்லை. அந்த 45 வகையான ஆவணங்களை வைத்துத்தான் கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்த வேண்டும் கூறி தமிழ்நாடு சிறு கனிம விதிகள் கூறுகிறது. பல்வேறு ஆவணங்கள் இணைக்கப்படவில்லை. ஆகவே இனிவரும் காலங்களில் சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்தில் அனைத்து ஆவணங்களையும் இணைத்துத்தான் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று எங்களுடைய தாழ்மையான கோரிக்கையை வைக்கின்றோம். குவாரி புலத்தை காட்டும் கிராம வரைபடம் இணைக்கப்படவில்லை FMB வைத்துள்ளார்கள். கிராம வரைபடத்தில் வைக்கவில்லை. FMB வரைபடத்தில் வீடுகள், ஓடை ஆகியவற்றை எடுத்துள்ளார்கள் எப்படி நாங்கள் எங்கள் கருத்தை கூறமுடியும். எந்த புள்ளி விவரங்களை பார்த்து எங்களால் கருத்தை கூறமுடியவில்லை நேரில் சென்று ஆய்வு செய்த பிறகுதான் விவரங்கள் எங்களுக்கு தெரிகிறது. சத்யா குவாரி, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக்கழகம் குறிப்பு விதிகள் கடிதம் SEIAA 06.11.2023 அன்றுதான் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. கடிதம் கொடுக்கும் முன்பே 01.10.2023 லிருந்து 31.12.2023 ஆய்வு செய்யப்பட்டதாக கூறுகிறார்கள். முன்கூட்டியே ஆய்வு செய்துவிட்டதாக கூறுகிறார்கள். இப்படி பல்வேறுவிதமான விதிமீறல்கள் உள்ளது ஏற்கனவே இயங்கிய குவாரி, பக்கத்தில் உள்ள குவாரிகள்

அனைத்தும் பசுமை அரண் அமைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். எந்த இடத்தில் பசுமை அரண் அமைத்துள்ளார்கள். இயங்கிய குவாரிகள், மூடப்பட்ட குவாரிகள் எதிலாவது பசுமை அரண் அமைத்துள்ளார்களா ? என்று பாருங்கள். தமிழ்நாடு அரசு பருவ நிலை மாற்றத்தின் காரணமாக வெயில் அதிகமாக, மழை குறைவாக உள்ளதால் ஏழுகோடி மரக்கன்றுகள் நடுவதற்காக நம்முடைய வரிப்பணத்தில் செலவு செய்கிறார்கள். கல்குவாரி உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் 1 இலட்சம், 2இலட்சம் செலவு செய்கிறார்கள்.

500 மரக்கன்றுகள், 600 மரக்கன்றுகள் நடுகின்றேன் என்று கூறுகிறார்கள். இந்த குப்பம் கிராமத்தில் எனக்கு தெரிந்து 50, 60 குவாரிகள் இயங்கிக் கொண்டிருக்கிறது எந்த குவாரியிலாவது அவர்கள் கூறியபடி பசுமை அரண்கள் வைத்துள்ளார்களா ? மரங்கள் வைத்துள்ளார்களா ? என்று பாருங்கள் என்று வினவினார். ஒரு இடத்தில் கூட பசுமை அரண்கள் இல்லை. இந்த குவாரி ஏற்கனவே இயங்கிய குவாரிதான் பசுமை அரண்கள் வைத்துள்ளார்களா ? என்று பாருங்கள். நாட்ராயன் குவாரி, தேவராஜ்குவாரி அந்த பக்கம் உள்ள KSR குவாரி பசுமை அரண்கள் வைக்கப்படவில்லை. பெயரளவில் பசுமை அரண்கள் வைக்கிறோம் என்று கூறகிறார்கள் ஆனால் வைக்கப்படவில்லை. தேன் என்று கூறி உண்டால் இனிக்காது ஐயா, பேப்பரில் எழுதி வைத்தால் மட்டும் நடைமுறை ஆகாது. இன்று இயற்கை நமக்கு மிகப்பெரிய அழிவை கொடுத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் 10 ஆண்டுகளில் பார்த்தால் அழிவு ஏற்படும் என்று கூறுகிறார்கள். தமிழ்நாட்டில் 6 இடங்களில் பரமத்தி பகுதியும் ஒன்று என்று கூறியுள்ளார்கள்.

கரூர் மாவட்டத்தில் ஒரு வருடத்தில் மட்டும் 10–க்கும் அதிகமான குவாரிகள் இருந்திருக்கின்றன. இதற்கெல்லாம் என்ன விடிவுகாலம் என்று தெரியவில்லை ? எந்தவிதமான உபகரணங்களும் அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. PF பிடிக்கப் படுவதில்லை. அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. எங்கிருந்தோ வெளியூர்களில் இருந்து இங்கே வந்து வேலை செய்கிறார்கள். உயிர் போகும்போது நம்முடைய உயிராக நினைத்து இருந்தால், அது எவ்வளவு பெரிய பாதிப்பு என்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கும். அதனால், இந்த குவாரி எந்த விதத்திலும், அதாவது தமிழ்நாடு சிறுகனிம சலுகைபடி பல்வேறு விதிமீறல்கள் உள்ளன. பக்கத்தில் பள்ளிகள், நீர்நிலைகள், ஒடைகள் இருக்கிறது. சாலையை ஒட்டியே 300 மீட்டர் சுற்றளவிற்குள் டவர் லைன் செல்கிறது. அதனால் இந்த குவாரிக்கு எக்காரணத்தைக் கொண்டும் அனுமதி கொடுக்கக் கூடாது. அனுமதி கொடுப்பீர்கள் ஆனால், அதை சட்டப்படி, நீதி மன்றத்தை நாடி அதற்கான வேலைகளை செய்வோம். இந்த குவாரி அந்த பகுதியில் அமையக் கூடாது. அமையும் எனில் அந்த பகுதியில் ஏற்கனவே 5, 6 குவாரிகள் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த பகுதியினுடைய வரைபடத்தில் பார்த்தீர்களேயானால் சுற்றளவு 500 மீட்டர். அதில் கரூர் படமாகத் தான் தெரியும். ஒரு பாதிப்பு ஏற்பட்டால் அந்த இடமே பாலைவனமாக மாறக்கூடிய நிலைமை இருக்கிறது. அதனால் எக்காரணத்தைக் கொண்டும் சத்யா குவாாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி வணக்கம் என்று கூறி தன் உரையை முடித்துக் கொண்டார்.

2. **திரு. சா. ரகுமான், கரூர்.**

கரூர் மாவட்ட நிர்வாகம் அவர்களுக்கும், கரூர் மாசு கட்டுப்பாடு வாரிய நிர்வாகிகளுக்கும் மற்றும் பொதுமக்கள், ஊடகத்துறை நிர்வாகிகளுக்கும் மற்றும் இங்கு வருகை புரிந்திருக்கின்ற அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சத்யா கல்குவாரி, நான் முன்பே சொன்ன மாதிரிதான் அனைத்துமே வீடுகள், ஓடைகள் உள்ளது. அதில்லாமல் மின் வட மேற்கு பகுதியில் மின்கோபுரம் உள்ளது. 1951 36, 1 விதியின் படி இந்த திட்டத்தின் கீழ் அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அதில் ஆவணங்களும் மறைக்கப்பட்டுள்ளது. ஆவணங்களை மறைக்க சில அதிகாரிகள் துணை போவதற்கு இந்த 60 ஆண்டு பணிபுரிவதற்கு பதிலாக இந்த ஆவணத் தயாரிப்பதற்காக கல்குவாரிகளுக்கு சென்று பணி செய்தால் 5 வருடத்தில் நீங்கள் 60 ஆண்டு பணி செய்யாமலேயே இந்த பணத்தை பெற்றுக் கொள்ளலாம். ஏன்னென்றால், எதற்கு ஆவணத்தை மறைத்துக் கொண்டு இந்த பணி செய்கிறீர்கள்? ஏன் இந்த அதிகாரிகள் உறுதுணையாக இருக்கிறார்கள். இந்த கல்குவாரிகளுக்கு, அவர்கள் பணியை ராஜினாமா செய்துவிட்டு 5 குவாரிகளுக்கு வேலை செய்தாலே பட்டா மாற்றிக் கொடுத்தல், ஆவணங்களை மாற்றிக் கொடுத்தாலே சம்பாதித்துக் கொள்ளலாம். ஏகபோகமாக வாழலாம். எனவே பல ஆவணங்களை மறத்துக் கொண்டு இந்த கல்குவாரிகள் இயங்குவதால், அதற்கான அனுமதியை மறுக்க வேண்டும் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம் நன்றி என்று கூறி தன் உரையை முடித்துக் கொண்டார்.

3. **திரு. S. விஜயன், கரூர்.**

இந்த கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கும், பொது மக்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும், உளவுத் துறை, காவல் துறை, இங்கு இருக்கும் குவாரி உரிமையாளர் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஒரு சில விதிகளை மட்டும் சொல்கிறேன். கரூர் மாவட்டத்தில் செயல்படுகின்ற பல குவாரிகளில் விதிமீறல்கள் அதிகமாக இருக்கிறது. உதாரணத்திற்கு பார்த்தீர்களேயானால் 7 மணியில் இருந்து மாலை 5 மணிவரை இயங்கும் என்று சொல்கிறார்கள். ஆனால், இரவு நேரங்களிலும் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அதற்கு முதலில் தடை உத்தரவு போடுங்கள். அதற்கு அடுத்தப்படியாக பார்த்தீர்களேயானால் வெடிவைக்கின்ற நேரம் 9 மணியில் இருந்து 3 மணிவரை மட்டும்தான். ஆனால், இங்கு பார்த்தீர்களேயானால், வெடி எந்த நேரத்தில் வைக்கிறார்கள் என்றே தெரியவில்லை. அவர்களுக்கும் தெரியவில்லை. பொதுமக்களுக்கும் தெரியவில்லை. வெடி சத்தம் பாத்தீர்களேயானால் நிலம் பிளவு படுகின்ற அளவிற்கு வெடி சத்தம் இருக்கிறது. வீடுகளில் விரிசல் விழுகிறது. ஆனால் நாணல் வெடி மாதிரி வெடிகள் தான் வைத்து வெடிக்க வேண்டும். ஆனால் அதை கடைபிடிப்பதில்லை. அடுத்து பார்த்தீர்களேயானால், இவர்கள் குவாரி சம்பந்தமான முழு விபரம் அடங்கிய விளம்பர பதாகை வைக்கவேண்டும். அவற்றை வைக்கவில்லை அவற்றை முழுமையாக வைக்க வேண்டும்.

அதேபோல் 200, 300 அடி வரை குழி பறிக்கிறார்கள் இது சட்டவிரோதமானது. குவாரிகளிலிருந்து தண்ணீர் எடுக்கக் கூடாது என்று ஒரு விதி இருக்கின்றது. ஆனால் 2 நாளைக்கு முன்பு தலையூத்துப்பட்டியில் பரமத்தி கிணற்றில் தண்ணீர் எடுக்கும் போது லாரி மோதி அவர் அங்கேயே

இறந்துவிட்டார். இது சட்ட விரோதமானது. இது மாதிரி அதிகமாக நடக்கின்றது. இப்பொழுது வெளியில் இருந்து பார்த்தீர்களேயானால் ஆறுகள், குளங்களிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டுவந்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பலமுறை தகவல் கொடுத்திருக்கின்றோம். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்தபடியாக 16 சக்கரம் கொண்ட லாரி தேசிய நெடுஞ்சாலையில் செல்வதற்கு 46 டன் மட்டும்தான் செல்ல வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால் 70, 80 யூனிட் சென்று கொண்டிருக்கிறது. அதையும் தடை செய்ய வேண்டும். அடுத்தபடியாக இயற்கை விதிமுறை பற்பல இருக்கிறது. டவர்லைன் அதிகமாக செல்கிறது. டவர்லைன் போகும் வழியில்லேயே அனுமதி கொடுக்கும்போது தண்ணிரில் கூட பாதிப்பு வந்துவிட்டது. அதுபோல் இங்கே புகழ் பெற்ற பாலமலை பக்கத்தில் இருக்கிறது. 4183 கூட்டுக் குடிநீர் திட்டம் இருக்கிறது. இதெல்லாம் பாதிக்கப்படுகிறது. அதனால், இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று கூறி விடைபெறுகிறேன் என்று கூறி தன் உரையை முடித்துக் கொண்டார்.

4. **<u>திரு. பி. மோகன்ராஜ், கரூர்:</u>**

என் பெயர் பி. மோகன்ராஜ், குப்பம் கிராமம். இந்த குவாரி 15 வருடமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இந்த குவாரி சட்ட விரோதமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், விதிகளுக்குட்பட்டு கடந்த 15 வருடமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. குவாரிக்கு திரும்ப அனுமதி கொடுப்பதற்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறி தன் உரையை முடித்துக் கொண்டார்.

5. **<u>திரு. பா. குணசேகரன், வெள்ளாளப்பட்டி:</u>**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக, கரூர் மாவட்டம் புகளூர் வட்டம். புன்னம் கிராமத்தில் 1287 புல எண் பகுதி 1 மற்றும் 3 –ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கல்குவாரி நடைபெறுகிறது. இந்த கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தக் கூடிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களே, மாவட்ட சுற்றுச்சூழல் அதிகாரி அவர்களே, இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள விவசாயிகளே, சுற்றுச்சூழல் ஆர்வளர்களே, என் நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 –ம் தேதி அன்று சட்ட விரோதமாக கனிமக் கொள்ளையர்களால் படுகொலை செய்யப்பட்ட கல்குவாரி எதிர்ப்பு போராளி இதே குப்பம் கிராமத்தை சார்ந்த பள்ளிப்பாளையம் ஜெகநாதன் அவர்களுக்கு இந்த நேரத்திலே வீர வணக்கம் செலுத்திக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த கல்குவாரியைப் பொறுத்தவரை புல எண்.1287 பகுதி 1 மற்றும் 3 எனக்கு முன் பேசிய நண்பர் கூறியது என்னவென்றால் கடந்த 15 ஆண்டுகளாக இந்த கல்குவாரி தொடர்ந்து இயங்கிக் கொண்டு வருகிறது என்று கூறினார். இந்த கல்குவாரிக்கு ஏற்கனவே அனுமதி கொடுக்கப்பட்டு அதற்காக பல ஆண்டுகளுக்கு குத்தகைக் காலம் முடிந்துவிட்டது. ஆனால் அவர் ஒத்துக் கொண்ட ஒரு செய்தி என்னவென்றால் ஏற்கனவே அந்த கல்குவாரிக்கு அனுமதி காலம் முடிந்து பல ஆண்டுகள் கடந்த பின்பும் தொடர்ந்து அந்த கல்குவாரி 15 ஆண்டுகளாக இயங்கி வருகிறது என்ற உண்மையைச் சொன்னதற்கு தோழர் பி. மோகன்ராஜ்க்கு நன்றியை கூறிக்கொள்கிறேன். இது ஒன்றே போதும். இப்பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்து கல்குவாரியுமே காலாவதியான பிறகும் இயங்கிக்

கொண்டிருக்கிறது. பெரும்பாலான குவாரிகள் சட்டத்திற்கு விரோதமாக இயங்கி பல விபத்துகள் நேர்ந்த பின்புதான் வெளியில் தெரிந்திருக்கிறது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு 2022 –ஆம் ஏப்ரல் மாதத்தில் NTC கல்குவாரியில் ஒரு லாரி விழுந்து ஓட்டுநர் எரிந்து சாம்பலாகி லாரி நசுங்கி இரண்டு நாட்களுக்குப் பிறகு எடுத்தார்கள். நம்முடைய மாவட்ட நிர்வாகம், தீயணைப்புத் துறை, காவல்துறை எல்லாருமே இரண்டு நாட்கள் போராடி அவரை எரிந்து போன கரிக்கட்டையாகத் தான் உடலை மீட்டார்கள். நேற்று முன்தினம் இதே பகுதியில் செல்வ விநாயகா புளூ மெட்டலில் சட்ட விரோதமாக கல்குவாரியில் நீர் திருடப் போன டேங்கர் லாரி 100 அடி உயரத்தில் இருந்து விழுந்து அதனுடைய ஓட்டுநர் இறந்துவிட்டார். லாரி அப்பளம் போல் நொறுங்கி விட்டது. இதெல்லாம் நம் பகுதியில் மாத மாதம் நடந்து கொண்டிருக்கிறது. இதே போன்று சென்ற மாதம் ஒன்றும் அதற்கு முந்தைய மாதம் ஒன்றும் நடந்தது. இந்த கல்குவாரிகள் விதிமுறைகளை மீறி சட்டத்திற்குப் புறம்பாக இயங்குவதினால் ஏற்படக் கூடிய விபத்துகளால் மனித உயிர்கள் எப்படி எல்லாம் பலியாயிருக்கிறது.

ஒவ்வொரு மாதமும் செய்தித்தாள்களில் நாம் பார்த்துக்கொண்டு தான் வருகிறோம். இப்பொழுது நம் தோழர் சொன்னது போல் கோபிச்செட்டிபாளையத்தில் பங்களாபுதூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.250 என்று 15, 20 நாட்களுக்கு முன்பே பதிவு செய்கிறார்கள். அந்த கல்குவாரி சட்ட விரோதமாக இயங்குகிறது என்று கூறி அனுமதி மறுத்ததற்குப் பிறகு மறுபடியும் இரவு பொழுதில் துளையிட்டு வெடி வைத்து இரண்டு அப்பாவி உயிர்கள் பலியாகிவிட்டது. 3 பேரை காவல்துறை கைது செய்துள்ளனர். இதேதான் தமிழகம் முழுவதும் கல்குவாரிகளில் அப்பாவி மனிதர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கல்குவாரியைப் பொறுத்தவரைக்கும் என்னென்ன விதிமீறல்கள் இருக்கிறது என்று தோழர் சுட்டிக்காட்டினார். இந்த குவாரியின் அருகில் மேல்புறம் குப்பம் கிராமம், கீழ்புறம் புன்னம் சத்திரம் கிராமம் என இரண்டு கிராமங்கள் சந்திக்கக் கூடிய இடம் இருக்கிறது. இந்த மேல்புறத்தில் ஏற்கனவே இரண்டு குவாரிகள் காலாவதியாகிவிட்டது. அதில்லாமல் தேவராஜ் கல்குவாரி, சக்திவேல் கல்குவாரி இந்த இரண்டு கல்குவாரிகளுமே அனுமதி கேட்டு கருத்துக் கேட்புக் கூட்டம் நடந்து எங்களைப் போன்ற சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பலர் எதிர்ப்பு தெரிவித்ததினால் இன்றும் அந்த இரண்டு கல்குவாரிகளுக்கும் அனுமதி கொடுக்காமல் இருக்கிறார்கள். ஏற்கனவே இரண்டு கல்குவாரிகள் காலாவதியாகிவிட்டது. இந்த நான்கு கல்குவாரிகளுமே சட்டவிரோதமாக கனிமக் கொள்ளை, திருட்டு என நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த குவாரியை பொறுத்தவரைக்கும் புன்னம் கிராமத்தில் 1.28.0 ஹெக்டேர் அனுமதி கேட்டிருக்கின்றார்கள். ஏற்கனவே சட்ட விரோதமாக இது 15 ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த கல்குவாரியைப் பொறுத்தவரை இந்த சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை தயாரித்திருக்கிறார்கள்.

அதில் பல அடிப்படையான உண்மைகள் மறைத்து தயாரிக்கப்பட்ட அறிக்கைதான் இந்த திட்ட அறிக்கை. இதில் பல பல உண்மைகள் மறைக்கப்பட்டு மோசடியான தகவல்களை கொண்டு தயாரிக்கப்பட்டது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த கல்குவாரிக்கு கிழக்கே 156 மீட்டரில் கிரிக் கார்ப்பரேசன் ஆப் இந்தியாவுக்குச் சொந்தமான ஒரு உயர் அழுத்த மின் கோபுர வழித்தடம் செல்கிறது. இக்குவாரியின் மேற்புறம் குப்பம் கிராமத்தையும், புன்னம் கிராமத்தையும் பிரிக்கக் கூடிய பஞ்சாயத்து தார்ச்சாலை வெறும் 5 மீட்டருக்குள் அமைந்துள்ளது. அது மட்டுமில்லாமல் தாழ்வழுத்த

மின்சாரம் செல்கிறது. இந்த கல்குவாரி அமையக்கூடிய இடத்தின் அருகில் வட கிழக்கில் 13 மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது. 226 மீட்டரில் அதே போல வடபுலத்தில் 192 –வது மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது. 209, 220–வது மீட்டரிலும் ஒரு வீடு இருக்கின்றது. அதேபோல் வட மேற்கிலும் சில வீடு இருக்கிறது. இது எல்லாம Google Map –ல் பார்த்து Digital ஆகவே அதை அளவீடு செய்து தான் இந்தத் தகவலை சொல்கிறோம். இந்த வீடுகள் இருக்கும் விவரத்தை இந்த அறிக்கையானது மறைத்திருக்கின்றது. அதைப் போலவே கிராம வரைபடத்தில் அந்த புலத்தில் ஏற்கனவே கிராம வரைபடத்தில் அந்த புலத்தில் எற்கனவே ஓடை செல்லக் கூடிய பகுதியாக கிராம வரைபடத்தில் புள்ளியிட்டு காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தத் தகவலையும் மறைத்திருக்கிறார்கள். அது மட்டுமில்லாமல் கிராம வரைபடத்தையே இந்த திட்ட அறிக்யையில் சேர்க்கவில்லை. ஏனென்றால், தெரிந்துவிடும் என்பதனால் சேர்க்கவில்லை. இதில் ஓடை இருக்கிறது. இதில் ஓடையின் வழித்தடம் இருக்கிறது என்று இந்த காரணங்களினால் தான் அந்த தேவராஜ் கல்குவாரிக்கும், சக்திவேல் கல்குவாரிக்கும் ஏற்கனவே கருத்துக் கேட்பு கூட்டம் நடந்தும் அனுமதி மறுத்திருக்கிறார்கள். திட்ட அறிக்கையில் 51–வது பக்கத்தில் திட்ட அறிக்கை தயாரித்தவர் Admitted Statement என்ன சொல்லியிருக்கிறார் என்றால், நிலத்தடி நீர் மட்டச் சூழல் பற்றி அட்டவணையாக சொல்லியிருக்கிறார்கள். அட்டவணையில் பார்த்தால் நிலையான நீர் மட்டம் என்பது 69 மீட்டர் ஆகும். நிலத்தின் மேலிருந்து கீழ் வரை 69 மீட்டரில் நிலத்தடி நீர் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்பொழுது நிலத்தடி நீர் மிகவும் கீழே இருக்கிறது. அதேபோல், அமிலத்தன்மையும், காரத்தன்மையும், சராசரி அளவை விட மிக அதிகளவு இருக்கிறது. 69 மீட்டர் அடியில் உள்ள நீரிலேயும் அமிலத்தன்மையும், காரத்தன்மையும் சராசரி அளவைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் காட்டும் புள்ளி விவரங்களிலே சொல்கிறார்கள். இதனாலேயே இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் கால்நடை வளர்க்கக் கூடிய விவசாயிகள் வாழ்வாதாரம் என்பது மழைநீரையும், நிலத்தடி நீரையும் ஆதாரமாகக் கொண்டுதான் அவர்கள் வாழ்வாதாரமே இருக்கிறது.

கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்து கால்நடைகளை பராமரித்து பாதுகாக்க முடியும், விவசாயம் செய்ய முடியும். மழை பெய்வது என்பது அரிதாகத்தான் இருக்கிறது. இந்தப் பகுதியின் சுற்றுச்சூழல் நிலத்தடி நீர் ஆதாரம் விவசாயிகளின் வாழ்வாதாரம் எல்லாமே ஏற்கனவே அழிந்து போய்விட்டது. இந்தச் சூழலில் இந்தப் புதிய கல்குவாரிக்கு அனுமதி கொடுத்தால் கொஞ்சமாக இருக்கக் கூடிய உயிர்ச்சூழல் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து விடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும், சுற்றுச்சூழல் ஆணையமும் இந்த கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது. இந்தக் கல்குவாரி முறையற்ற வகையில் இயங்கியதற்கு மாவட்ட வருவாய் துறையும், கனிம வளத்துறையும் நடவடிக்கை எடுத்து கல்குவாரியில் முறையற்ற வகையில் இயங்கி திருடப்பட்ட கனிமத்திற்கு டிஜிட்டல் சர்வே செய்து அதற்குரிய அபராதத் தொகையை வசூலிக்க வேண்டும். தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதி அனுமதியில்லாமல் கனிமங்களை வெட்டி எடுப்பவர்கள் மீது 15 மடங்கு அதிகமான அபராதத்தொகை விதிப்பதற்கு சட்டம் வழிவகுக்கின்றது. அந்த அடிப்படையில் கடந்த 15 ஆண்டுகளாக T. சத்யா குவாரியில் சட்டவிரோதமாக வெட்டி எடுக்கப்பட்ட கனிமங்களுக்கு 15 மடங்கு அபராதம்

விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த கல்குவாரிக்கு அனுமதி கொடுக்க கூடாது என்று தனது உரையை முடித்துக்கொண்டார்.

6. **திரு. M. அருணாச்சலம், புன்னம்சத்திரம்:**

கல்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆட்சேபனை எதுவும் இல்லை என்று கூறினார்.

7. **திரு.S. முருகேசன், புன்னம்சத்திரம்:**

T. சத்யா கல்குவாரிக்கு அனுமதி தரலாம் என்று கூறினார்.

8. **திரு.A. தேவராஜ், புன்னம்:**

கரூர் மாவட்ட வருவாய் அலுவலருக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் வணக்கம். இந்த T. சத்யா கல்குவாரிக்கு அனுமதி தரலாம் என்று கூறினார்.

9. **திரு. M. குழந்தைவேலு, ஆண்டிபட்டி:**

நமது புன்னம் கிராமத்தில் அமைந்துள்ள T. சத்யா கல்குவாரிக்கு அனுமதி தரலாம் என்று கூறினார்.

10. **திரு. M. லட்சுமிகாந்தன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், மாவட்ட செயலாளர், கரூர்:**

கருத்துகேட்புக் கூட்டத்திற்கு தலைமை பொறுப்பேற்றுள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். T. சத்யா கல்குவாரி சிறிய குவாரியாகத்தான் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதைபோல் ஆரம்ப கட்டத்தில் அரசின் அனைத்து ஆவணங்களையும் சமர்பித்து அரசின் வழிகளைப் பின்பற்றி சத்யா குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று தனது கருத்தைப் பதிவு செய்தார்.

11. **திரு.S. பாலகிருஷ்ணன், பஞ்சங்குட்டை:**

இந்த கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட வருவாய்துறை மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பொதுமக்கள் அனைவருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியக்குழுவின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சத்யா கல்குவாரியானது நான் வசிக்கும் பகுதியில் இருந்து 1கிலோமீட்டர் தொலைவின்தான் அமைந்துள்ளது. நான் அறிந்த வரையில் சிறு கல்குவாரிதான். எனது சொந்த ஊரில்தான் இந்தக் கல்குவாரி உள்ளது. இந்த கல்குவாரிக்கு கிரஷர் நிறுவனங்கள் கிடையாது. முற்றிலும் மனித உழைப்பை பயன்படுத்தி தான் இந்த கல்குவாரி செயல்படுகிறது. இதுபோன்ற கல்குவாரிகள் செயல்படும்பட்சத்தில் சாதாரண மக்கள் மற்றும் நடுத்தர மக்கள் கட்டுமான பொருள்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இருக்காது. இந்த கல்குவாரியை சுற்றி 4 செயல்படாத கல்குவாரிகள்தான் அமைந்துள்ளது. ஏனென்றால் உள்ளூரில் இருப்பதால் எனக்கு நன்கு தெரியும். தோழர்கள் வெளியூரில் இருந்து தவறான தகவல்களை பதிவு செய்கிறார்கள். எனவே இந்த சத்யா கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் என்று கூறினார்.

12. **திரு.R. சாமிநாதன், குரும்பப்பட்டி:**

T. சத்யா கல்குவாரிக்கு அனுமதி தரலாம் என்று கூறினார்..

13. **திரு.சரணவணன், புன்னம்:**

கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

14. **திரு.காமராஜ், புன்னம்:**

கரூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், பொதுமக்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கருத்துக்கேட்புக் கூட்டமானது அனுமதி வழங்கலாமா? வேண்டாமா? என்பது பற்றிய கூட்டம். சத்யா குவாரிக்கு Mining Act சிறுகனிம சலுகை விதிகளின்படி மனித ஆற்றலை கொண்டு நடைபெறும் இந்தக்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறி விடைபெறுகிறேன் என்றார்.

15. **திரு.குழந்தைவேல், புன்னம்:**

சத்யா கல்குவாரி இயங்க எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்..

16. **திரு.சதாசிவம், புன்னம்:**

சத்யா கல்குவாரி இயங்க எந்தவித ஆட்சேபனையும் இல்லை அனுமதி கொடுக்கலாம் என்று கூறினார்.

17. **திரு.பெ. சதானந்தம், புன்னம்:**

சத்யா கல்குவாரி இயங்க அனுமதி அளிக்கலாம் என்று கூறினார்.

18. **திரு.P.R. பிரபாகரன், பண்டுதன்காரன்புதூர்:**

புன்னம் கிராமம், சர்வே எண். 1287/1, 1287/3–ல் இயங்கிக் கொண்டிருக்கும் T. சத்யா சாதாரண கல்குவாரி கல் உடைப்பதால் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு குறைந்த விலையில் கட்டுமான பொருட்கள் கிடைப்பதற்கு மிகப்பெரிய வாய்ப்பு உள்ளது. கல்குவாரிக்கும், எனக்கும் 10 வருட பழக்கம் உள்ளது. பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தாது. எனவே சத்யா கல்குவாரிக்கு அனுமதி கொடுத்து அந்த நிறுவனத்தை இயக்குவதற்கு அரசு பரிந்துரை செய்ய வேண்டும் என்று கூறினார்.

19. **திரு.C. மோகன்ராஜ், கரூர்:**

இந்த கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், பொதுமக்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும், காலை வணக்கம். இந்தக் குவாரி மெஷின்கள் மூலமாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது அதுவும் அளவில்லாத வகையில் வெட்டி எடுக்கப்படுகின்றன என்பதுதான் உண்மை. சிறிய குவாரி சிறுகனிம விதிகளின்படி கொடுக்கலாம் என்கிறார்கள். சட்டவிதிப்படி, கனிமவிதிப்படி என்ன இருக்கின்றதோ அதன்படிதான் அனுமதி வழங்க வேண்டும். சிறிய குவாரி என்பதற்காக அவர்கள் விதிமுறையை மீறினால் நாம் அனுமதி வழங்க இயலாது. எனவே சிறிய குவாரி, பெரிய குவாரி, சின்ன திருடன், பெரிய திருடன் என்பது இங்கு விதியல்ல சட்டம் என்ன கூறுகிறது, சிறு கனிம விதி என்ன கூறுகிறது என்பதுதான் இங்கு முக்கியம். எனக்கு முன்பு பலர் கருத்து தெரிவித்துவிட்டனர். என்னென்ன விதி

உள்ளது என்று தெரிய வருகிறது. இந்த விதிமுறைகளை மீறி இந்தக் கல்குவாரி இயங்கி வந்திருக்கிறது என்று நமக்குத் தெரிகிறது. இப்பொழுது புதிய அனுமதி கேட்கிறார்கள். இந்த விதிமுறைமீறல்கள் இருப்பதால் இதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பது எனது தாழ்மையான கருத்து நன்றி என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

20. திரு.S. பாலகிருஷ்ணன், பஞ்சங்குட்டை:

கரூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணைந்து நடத்தும் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் எனது கருத்தை பதிவு செய்வதற்கு வந்துள்ளேன். கல்குவாரி என்பது 15 வருடமாக இயங்கி கொண்டுள்ளது என்று அவசரப்பட்டு தவறாக கூறிவிட்டார். ஒவ்வொரு வருடமும் 5 வருடம் அனுமதி பெற்று இயங்கி வருகின்றது. சிறிய நிறுவனம் பெட்டிக்கடை நடத்துபவர்களை பூதக்கண்ணாடி வைத்து குறைகளை நீங்கள் பூதகரமாக பெரிதுபடுத்திக் கூறுகிறீர்கள் தோழர் கூறுகிறார் சிறியது என்றாலும், பெரியது என்றாலும் ஒன்றுதான் என்று அனைவரும் திருடன்தான் என்று கூறுகிறார். அவர் கூறும் அளவிற்கு அரசு விதிகளை மீறியோ, கனிம விதிகளை மீறியோ, அங்கு எந்தவிதமான சட்ட விதிமீறல்களும் இல்லை. அதனால் அரசு கனிமவிதிகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நடைபெற்ற பொதுமக்களின் கருத்துக்களை வீடியோவாகவும், எழுத்துரு மூலமாகவும் பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:

இறுதியாக தனது நன்றி உரையில் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திய மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும் தனது நன்றியை தெரிவித்தார். இறுதியாக நாட்டுப்பண் ஒலித்தது. அத்துடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கரூர்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
கரூர்.